பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை-28

சுற்றறிக்கை

எண்.44375/சி1/2016 நாள் 28/10/2016

பொருள் : தகவல் அறியும் உரிமை சட்டம் - தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் சென்னை, திரு.நா.தாமோதரன், அவர்கள் தொடரப்பட்ட வழக்கு - தொடர்பாக.

பார்வை : 1.தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வழக்கு எண்.SA.5981/மா.த.த.ஆ/2016, நாள் 07.09.2016.
2.பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கை 18223/சி1/2013-1, நாள் 08.11.2013.

****

பார்வை (1)ல் காணும் தமிழ்நாடு தகவல் ஆணைய ஆணையில் பத்திரம் ஒன்றின் பதிவை நிறுத்தி வைக்கும்போது நிலுவையில் ஏன் வைக்கப்பட்டுள்ளது என்பது குறித்து பதிவு செய்த அன்றே கொடுக்கப்பட்டிருந்தால் வெளிப்படைத்தன்மைக்கு உகந்ததாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை (2)ல் காணும் பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கையில் ஆவணம் எந்த காரணத்திற்காக நிலுவையில் வைக்கப்படுகின்றது என்ற விவரத்தினை ரசீதின் அடியில் எழுதித்தர வேண்டும் எனவும், நிலுவையை தவிர்ப்பதற்காகவும், நிலுவையில் வைக்கப்படும் ஆவணங்கள் மீதான நடவடிக்கை குறித்தும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பதிவு விதி 101(i) If a document is ready for transcription on the day of its presentation, the day and hour when it will be ready for return shall be endorsed on the receipt. In the case of a document retained pending an inquiry or a reference, the day and hour of return shall be communicated to the presentant or his nominee by a separate notice issued on the day when the document becomes ready for transcription. If, however, in the latter case the receipt is produced on the day when the document is ready for transcription and the document cannot be returned on that day, the information may be endorsed on receipt itself.

(ii) When a document is not ready for return on the date entered on the receipt or in the notice, the entry of that day shall, if the receipt or notice is produced before the registering officer, be cancelled and the probable latter date on which the document will be ready shall be entered under the initials of the registering officer.

(iii) Corresponding entries and corrections shall be made in the counterfoil.

Verified @ RealEstate™

Scanned by CamScanner

பதிவு விதி 101 (i), (ii),(iii)ல் குறிப்பிட்டவாறு ரசீதில் ஆவணம் திரும்ப வழங்குவது தொடர்பான விபரம் குறிப்பிட்டு வழங்குமாறும், மேற்படி சுற்றறிக்கையின்படி செயல்பட்டு எவ்வித புகாருக்கு இடமின்றி பதிவு அலுவலர்கள் செயல்படுமாறும் தெரிவிக்கப்படுகிறது.

துணைப்பதிவுத்துறைத்தலைவாகள் மற்றும் மாவட்டப்பதிவாளர் ஆகியோர் சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆய்வு மேற்கொள்ளும் போது பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கைக்கிணங்க செயல்படுகின்றனரா? என்பது குறித்து கண்காணிக்குமாறும், தக்க அறிவுரை வழங்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/...28/10/2016
பதிவுத்துறைத்தலைவர்

/ஆணைப்படி/

பதிவுத்துறைத்தலைவருக்காக

பெறுநர்

அனைத்து துணைப்பதிவுத்துறைத்தலைவர்,
அனைத்து மாவட்டப்பதிவாளர்,
அனைத்து சார்பதிவாளர்.

Verified RealEstate TM

Scanned by CamScanner